முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1498

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.11.2023, ஞாயிற்றுக்கிழமை

1. கருணை வடிவான அரங்கனே
கலியுகத்தை மீட்கவந்த தேசிகனே
தர்மத்தை கொண்டே உலகமக்களை
தரணியெங்கும் ஞானிகளாக மாற்ற அற்புதம் நிகழ்த்துகின்ற
2. நிகழ்த்துகின்ற குருராஜனே அரங்கனே
நிலமதனில் உன்பெருமை கூறி
வரமென சுப்பிரமணியர் யானும்
வழங்குவேன் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள், 05.11.2023, ஞாயிற்றுக்கிழமை)

3. ஆசியதும் அரங்கன் உன் கரம்பட
அருளமுது உண்டு வரும் மக்களெல்லாம்
வாசி வென்ற நிலையை அடைவரப்பா
வையகத்தில் அவர்களெல்லாம் ஞானிகளாவர்
4. ஞானிகள் ஆவதற்கு ஆறுமுகன்யான்
நம்பகம் கொண்டு உன்வழி வருபவரை எல்லாம்
கனிவேலவன் யான் கனிவோடு வழிநடத்தி
காத்து அருள் புரிகின்றேன் வருகவே
5. வருகவே அன்னதனால் வையகத்தில்
பிரணவக்குடில் தொடர்பு கொண்ட
வையகத்தார் அனைவருக்கும் இனிதே தருகின்றேன்
பிறவா பெரும்பேற்றுக்கு உண்டான தக்க முழு தகுதி தன்னை
6. அன்னதனால் அரங்கன் தொடர்பு கொண்டு ஆக்கமுடன்
அறச்சேவை ஆற்றும் அன்பர்கள் அத்துணை பேருக்கும்
வரமென முருகன் என்ஆசியும் காட்சியும்
வையகத்தில் கட்டாயம் உண்டுஉண்டு

7. உண்டான அரங்கன் விரும்புகின்ற
உயர்வான ஞான ஆட்சிக்கு
கொண்டதொரு இந்த தொண்டர்களை கொண்டே
குறையில்லா அற்புதம் நடத்துவேன்

8. நடத்தவே நம்பக நிலை கொண்டு
நம்பிக்கையோடு அரங்கன்
ஞானவழியை முழு சரணாகதியோடு
ஏற்றுக் கொண்டவர்க்கு

9. கொண்டவர்க்கு இந்த கலியுகத்தில்
குறையில்லா ஞான ஆட்சியில்
அதிகாரமும் பதவியும் அற்புதமும்
ஆற்றல் மிக்க சேவைபுரிய உண்டான வாய்ப்பும் கிட்டநேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–